# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C No. 56 /2020

2022– வருடம் பிப்ரவரி மாதம் 1–ம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | தேவி (அ.சா.–2) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : | | வயது | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலுகா | : | | நாள் | : 01.2.2023 |
| மாவட்டம் | : | | | |

1–ம் எதிரி – ஐய்யப்பன் ஆஜர்
2–ம் எதிரி – குட்டி என்ற சுகுமார் ஆஜர்

முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் தற்போது பழனி அடிவாரம் குரும்பர் மடத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அ.சா.–1 எனது கணவர். எனது கணவர் அரசு போக்குவரத்து கழகத்தில் பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வருகிறார். 2–ம் எதிரியின் கடை குரும்பர் மடத்தில் உள்ளது. 2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் மடத்திற்கு வரும் EB லைனில் சரியாக கரண்ட் வராததால் EB க்கு தகவல் சொல்லி சரி செய்வதற்காக ஆட்கள் வந்த போது அதே மடத்தில் கடையில் வாடகைக்கு இருந்து வரும் 2–ம் எதிரி குட்டி என்ற சுகுமார் அருகில் இருந்த EB கம்பத்தில் தகரத்தை வைத்து கட்டியிருந்தார். வந்திருந்த EB ஊழியர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் அந்த மின் கம்பத்தில் கட்டியிருந்த தகரத்தை அகற்றி தருமாறு கேட்டார்கள். நானும் அப்போது வீட்டில் இருந்தேன். என் அம்மா அங்கு சென்று குட்டி என்ற சுகுமாரின் கடையில் இருந்த அவரது அம்மாவிடம் அந்த தகரத்தை அகற்றி தருமாறு கூறினார். அதற்கு அவர் கடையில் ஆள் இல்லை என்றும் பையன்கள் வந்த பிறகு சொல்கிறேன் என்று சொன்னார். உடனே என் அம்மா வந்திருந்த EB ஊழியர்களிடம் நீங்களே அந்த தகரத்தை அகற்றி விட்டு வேலை பார்த்து கொடுங்கள் என்று சொன்னார். அதற்கு கடையில் இருந்த எதிரி சுகுமாரின் அம்மா என் அம்மாவை அசங்கிமாக திட்டினார். உடனே என் அம்மா அவரிடம் மடத்துக்காரர் வந்தால் சொல்லிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார். அதன் பிறகு எதிரி குட்டி என்ற சுகுமாரிடம் அவரது அம்மா நடந்தது பற்றி சொல்லி அவர் என் அம்மாவை கெட்ட வார்த்தைகளால் திட்டி

அடித்துவிட்டார்கள். உடனே நான் 2–ம் எதிரியின் கடைக்குச் சென்று எதிரிகளிடம் ஏன் என் அம்மாவை தகாத வார்த்தைகளால் பேசினீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் என்னையும் திட்டி அடித்தார்கள். அது பற்றி நான் பணியில் இருந்த என் கணவருக்கு தகவல் கொடுத்தேன். என் கணவர் பணி முடிந்து மதியம் சுமார் 2 மணிக்கு நாங்கள் குடியிருக்கும் மடத்திற்கு வந்தார். அவர் வந்து என்னிடம் நடந்த விபரம் பற்றி கேட்டுக்கொண்டு எதிரிகளிடம் அது பற்றி கேட்பதாக சொல்லிவிட்டு போனார். என் கணவர் 2–ம் எதிரியிடம் கேட்டு விட்டு எங்கள் வீட்டிற்கு வந்த போது மடத்து வாசலில் வைத்து எதிரி ஐய்யப்பன் கத்தியால் என் கணவரின் இடது பக்க இடுப்பில் குத்தினார். அதில் அவருக்கு யூனிபார்ம் கிழிந்து குத்து பட்டு ரத்தம் வந்தது. என் கணவரை சிகிச்சைக்காக பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். என் கணவர் சிகிச்சையில் இருந்த போது அங்கு போலீசார் வந்தார்கள். என் கணவரிடம் அவர்கள் விசாரணை செய்த போது அவர் புகார் வாக்குமூலம் கொடுத்தார். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை : இல்லை.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR
Date: 2023.02.01 17:50:41 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.